## சப்ரகமுவ மாகாண கல்வித் திணைக்களம்

**கணிதம் - தரம் 04 / இரண்டாந் தவணை – வாரம் 12**

**தயாரிப்பு – இரத்தினபுரி கல்வி வலயம், ஆரம்பபிரிவு / ஆசிரிய ஆலோசகர் வீ.ராஜகுமாரி**

### 9.2 : நீளத்தை அளப்பதற்குரிய எளிய கூட்டல், கழித்தல் பிரசினங்களைத் தீர்த்தல்.

❖ மனக்கணிதம் (நினைவூட்டல்)

1). வகுப்பறையின் நீளத்தை அளப்பதற்கு பயன்படுத்தியது யாது? மீற்றர் கோல்

2). மீற்றரை அளக்கும் நியம குறியீடு யாது? m

3). ஒரு மீற்றரில் எத்தனை சென்ரிமீற்றர்கள் உள்ளன? 100cm

4). நீளத்தை அளக்கும் நியம அலகு யாது? m - மீற்றர்

5). 200 சென்ரிமீற்றர் எத்தனை மீற்றர்? 2m

100cm = 1m

❖ மீற்றர், சென்ரிமீற்றர் அலகு மாற்றத்திற்குரிய அறிவை மீட்டுக.

உ+ம் – வகுப்பறையின் நீளம் 4m 25cm எனின் எத்தனை சென்ரிமீற்றர் ? 425cm

I. கூட்டுவோம்.

| m cm | m cm | m cm | m cm | m cm |
|---|---|---|---|---|
| 1 40 | 5 30 | 1 50 | 3 62 | 8 75 |
| + 1 80 | + 3 75 | + 2 56 | + 9 75 | + 5 23 |
| 3 20 | | | | |

II. பிரசினம் தீர்ப்போம்.

1). ஒரு கம்பத்தின் நீளம் 1m 80cm ஆகும். இன்னுமொரு கம்பத்தின் நீளம் 8m 62cm ஆகும். இரு கம்பங்களினதும் நீளம் யாது? ............................

2). ஒரு கட்டிடத்தின் உயரம் 10m 45cm ஆகும். அதன் பக்கத்து கட்டிடத்தின் உயரம் 6m 55cm ஆகும். இரு கட்டிடங்களினதும் மொத்த உயரம் எவ்வளவு? ............................

3). கம்பி ஒன்றின் நீளம் 1m 66cm ஆகும். மற்றுமொரு கம்பியின் நீளம் 95cm ஆகும். இரு கம்பிகளினதும் மொத்த நீளம் யாது? ............................

III. கழிப்போம்.

| m cm | m cm | m cm | m cm | m cm |
|---|---|---|---|---|
| 3 50 | 5 35 | 8 45 | 8 45 | 3 24 |
| - 1 75 | - 2 50 | - 5 75 | - 6 60 | - 1 50 |
| 1 75 | | | | |

IV. பிரசினம் தீர்ப்போம்.

1). ரிபன் நாடா ஒன்றின் நீளம் 3m 50cm ஆகும். அதிலிருந்து வெட்டி நீக்கிய பகுதி 1m 75cm ஆகும். எஞ்சிய பகுதியின் நீளம் யாது? ......................................

2). Aயின் உயரம் 3m 66cm ஆகும். Bயின் உயரம் 1m 95cm ஆகும். Aயின் உயரம் Bயை விட எவ்வளவு கூடவாகும்? ....................................

3). கம்பம் ஒன்றின் உயரம் 4m 38cm ஆகும். அக்கம்பத்தின் 2m 80cm அளவிற்கு நிறம் பூசப்பட்டுள்ளது. நிறம் பூசப்படாத பகுதி எவ்வளவு? ..................................

❖ கணிதப் பாடநூலிலுள்ள (பக்கம் 76, 77) பயிற்சிகளைச் செய்து காட்ட வழிப்படுத்துங்கள்.